**22.01.2026**

அ.வ.எண். **249/2012**

<u>பி.சா.**1** ராமதாஸ் குறுக்கு விசாரணை</u>

**1**. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுடைய சொத்து என்று பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவாசொத்தின் சர்வே எண் **46/7** ஆகும். வாதிகளின் தாத்தா பெயர் மாரி என்றால் சரிதான். மாரி என்பவருக்கு ஆதிமூலம் என்பவர் மகன் என்றால் அவருக்கு **4** பிள்ளைகள் இருந்தார்கள், **3** மகன்கள் ஒரு மகள் ஆவார். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது. ஆதிமூலம் என்பவரின் வாரிசுகள் முனுசாமி மற்றும் ராமசந்திரன் ஆவார்கள். முனுசாமி மற்றும் ஆதிமூலம் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். முனுசாமி என்பவரின் மகன்கள்தான் இவ்வழக்கின் **1** முதல் **3** வாதிகள் என்றால் சரிதான், அவரின் மகள்கள் தான் இவ்வழக்கின் **4** மற்றும் **5** வாதிகள் என்றால் சரிதான்.

**2**. ஆதிமூலத்தின் மற்றொரு மகன் ராமசந்திரனும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவரின் வாரிசுகள் **6** முதல் **10** வாதிகள் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு ஆதியில் பட்டா ஆதிமூலம் பெயரில் இருந்ததா என்றால் இல்லை. தாவாசொத்திற்கு பழைய பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் அது கிராமநத்த சொத்தாகும், தற்போது எனது தாத்தா அஞ்சுரான் மற்றும் எனது அப்பா முனுசாமி பெயரில் இருக்கிறது. அதற்கு முன்னர் பட்டா எதுவும் இல்லை. மேற்சொன்ன பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

மேற்சொன்ன பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எந்த தேதி, மாதம, வருடம் பட்டா கொடுத்தார்கள் என்றால் 1972ம் வருடம் கொடுத்தார்கள். அந்த பட்டாவை தான் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்சொன்ன பட்டா 1972ம் ஆண்டு ஏற்படவில்லை, அப்படி ஒரு பட்டா இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பட்டாவை பற்றி எனது எதிருரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. லோகயநாயுடு என்பவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை, அவர் என் ஊர்தலைவர் ஆவார். கணினி பட்டா அனைத்தும் லோகயநாயுடு பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, எனது அப்பா பெயரும் உடனிணைந்து உள்ளது. லோகயநாயுடு என்பவருக்கும் தாவாசொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். லோகயநாயுடு தாவாசொத்தை எந்த காலத்திலும் அனுபவித்து வந்தது கிடையாது எனவே தாவாசொத்திற்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

4. தாவா சொத்தின் சர்வெ எண்.46/7, 7 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 5 உட்பிரிவுகளாகதான் பிரிக்கப்பட்டுள்ளது. எப்போது உட்பிரிவு ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கணினி பட்டாவிற்கு முன் எனது அப்பா பெயரில் வருவாய் துறை ஆவணங்களோ வேறு எந்த ஆவணங்களோ இருந்ததா என்றால் இல்லை. தாவாசொத்து 2 செண்ட் நிலம் பஞ்சாயத்து கிணறு

அமைப்பதற்காக எடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனவே மொத்தம் 12 செண்ட் தற்போது 10 செண்ட் நிலம்தான் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்திற்கு வடக்குபக்கம் தான் 2ம் வாதி குமாரின் வீடு உள்ளது என்றால் சரிதான்.

5. 2ம் வாதி குமார் தாவாசொத்து வழியாகதான் அவரின் வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் வழி கிடையாது, தற்போது தான் அவர் வழியாக பயன்படுத்தி வருகிறார். தாவாசொத்தில் 2011ம் வருடம் ஓட்டு வீடு கட்டினேன் என்றால் வருடம் எனக்கு ஞாபகமில்லை, சுமார் 20 வருடத்திற்கு முன்பு கட்டினேன். 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் என்பவருக்கு தாவாசொத்தில் வீடு இருந்ததா என்றால் தற்போது இல்லை, அவருடைய வீட்டை கலைமணி என்பவருக்கு விற்றுவிட்டார். கலைமணி எப்போது வீட்டை வாங்கினார் என்றால் 2012ம் வருடம் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வாங்கிவிட்டார். மேற்சொன்ன கலைமணி வாங்கிய கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

6. 2ம் பிரதிவாதி கிருஷ்ணன் என்பவருக்கு கூரை வீடுதான் இருந்தது. தற்போது காலியாக உள்ளது. 3ம் பிரதிவாதி சத்யா என்பவருக்கும் தாவாசொத்தில் வீடு இல்லை என்றால் தற்போது இல்லை, அவர்கள் வேறு ஒரு இடத்தில் வசித்து வருகிறார். கலைமணி தாவாசொத்தில் வசித்து வருகிறாரா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி குப்பன் வேறு ஒரு இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார், தாவாசொத்தில்

இல்லை என்றால் சரிதான். 5, 6 பிரதிவாதிகள் வேறு இடத்தில் வசித்து வருகின்றனர் என்றால் சரிதான். தாவாசொத்திற்கு மூன்று வீடு தள்ளி வேறு இடத்தில் மாடி வீடு கட்டி வருகிறேன் என்றால் சரிதான். 2ம் வாதி குமார் என்பவர் வேலை நிமிர்த்தமாக சென்னையில் வசித்து வருகிறாரா என்றால் இல்லை, அவர் தாவா கிராமத்தில்தான் இருக்கிறார்.

7. பி.சா.ஆ.1 ல் உள்ள பொன்னன் மகன் தனபால் தாவா சொத்தில் வீடு கட்டி வசித்து வருகிறாரா என்றால் முன்பு இருந்தார், தற்போது இல்லை. தனபால் தற்போது எங்குள்ளார் என்றால் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் வேறு தாவா கிராமத்தில்தான் வேறு ஒரு சொத்தில் வசித்து வருகிறார்கள். பி.சா.ஆ 5 ஆவணத்தில் உள்ள அமிர்த்தம்மாள் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகள் தாவா கிராமத்தில் வேறு ஒரு இடத்தில் வசித்து வருகிறார்கள். நான் தாக்கல் செய்த கணினி பட்டாவை பொறுத்து தாலுக்கா அலுவலகத்தில் விசாரணை செய்தார்களா என்றால் ஊரில் வந்து எங்களை விசாரித்துதான் கொடுத்தார்கள். வாதிகளை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை, நாங்கள்தான் அந்த இடத்தில் அனுபவித்து வருகிறோம், எங்களைதான் விசாரித்தார்கள்.

8. பி.சா.ஆ.6 ஆவணத்தில் தெரு பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஊர் பெயர் உள்ளது. பி.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணம் வீட்டு வரி ரசீதுகள் மற்றும் குடிநீர் வரி ரசீதுகள் அனைத்தும் நான் கட்டி வருகிற மற்றொரு வீட்டினுடைய ரசீதுகள் தாவாசொத்தில் உள்ள வீட்டு வரி மற்றும் குடிநீர் வரி ரசீதுகள் கிடையாது என்றால் சரியல்ல. வாதிகள் தங்களின்

பட்டா பாஸ்புக் ஆவணத்தின் அடிப்படையில் தான் வழக்கை தாக்கல் செய்துள்ள விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இன்றைய தேதிவரை பழைய பட்டா பாஸ்புக் ஆவணம் வாதிகளின் மூதாதையர் பெயரில் இருந்து வருவதை நானும் எனது தகப்பனார் மற்றும் மற்ற பிரதிவாதிகள் வருவாய் துறையில் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**9**. எனது எதிருரையில் தாவாசொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாசொத்து வாதிகளின் மூதாதையர் பெயரில் உள்ள பட்டா பாஸ்புக் அடிப்படையில் வாதிகள் அனுபவித்து வந்த சொத்து, அவர்கள் வேலை நிமிர்த்தமாக வெளியூர் சென்றதால் தாவாசொத்தை நாங்கள் அபகரித்து வந்ததால் தாவாசொத்திலிருந்து வெளியே செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. மற்றொரு வீடு தாவா கிராமத்தில் இருப்பதால் தாவா சொத்திலிருந்து வெளியேறுவதில் எந்த கஷ்டமும் இல்லை என்றால் சரியல்ல. மற்ற பிரதிவாதிகள் வேறு ஒரு இடத்தில் வசித்து வருவதால் தாவாசொத்திலிருந்து வெளியேறுவதற்கு அவர்களுக்கு எந்த கஷ்டமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.சா.ஆ.**1** முதல் **5** ஆவணங்கள் அனைத்தும் வாதிகளை விசாரிக்காமல் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.